[1987 நவம்பர் 17

செருக்கனூர் ஏரிக்கரையை அகலப்படுத்துதல்.

174—(*வினா எண் 14727) **திரு. பூ. மு. நரசிம்மன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம், திருத்தணி வட்டம், செருக்கனூர் ஏரிக்கரையை அகலப்படுத்த அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1985 ஆம் ஆண்டு சிங்கப்பூர்—சென்னைக்கு வந்த சிதம்பரம் கப்பலில் தீ விபத்தினால் இறந்தவர்கள்.

1—வினா 80—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சிதம்பரம் கப்பலில் சிங்கப்பூரில் இருந்து சென்னை வரும்போது தீ பிடித்து இறந்தவர்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) இறந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிதியில் இருந்து கொடுத்த உதவித் தொகை எவ்வளவு?

விடை—

(அ) இத் தீ விபத்தில் மொத்தம் 43 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 24 பேர் இந்திய வம்சாவழியினர், 18 பேர் மலேசியா நாட்டைச் சேர்ந்தவர்கள், மற்றுமொருவர் சிங்கப்பூரைச் சேர்ந்தவர்.

(ஆ) இதை ஒரு தனி நேர்வாகக் கருதி விபத்தில் உயிரிழந்தவர் எந்நாட்டைச் சேர்ந்தவராயிருந்தாலும், அவருடைய குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவையொட்டி, உயிரிழந்த 43 நபர்களின் குடும்பத்திற்கு தலா ரூ. 5,000 வீதம் மொத்தம் ரூ. 2,15,000 முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.